[திரு. ஆ. கு. சுப்பையா] [28th February 1966

செய்து கொடுக்கவேண்டும். இதற்கான உத்தரவு போடவேண்டும் என்பதற்காகத்தான் இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வந்திருக்கிறேன்.

***கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் சபாநாயகர் அவர்களே, சென்ற 18-ம் தேதி நான் கும்பகோணத்திற்குச் சென்றிருந்தபோது, தஞ்சை மாவட்டத்திலுள்ள விவசாயிகள், மற்றுமுள்ள விவசாயப் பிரதிநிதிகள் முதலியோர், சுமார் 100-க்கு மேற்பட்டவர்கள், என்னைப்பார்த்து இது சம்பந்தமான பிரச்னைகளை எல்லாம் தெரிவித்தார்கள். நானும் இருக்கின்ற நிலைமைகளை விளக்கினேன். அரசாங்கம் இதில் வேண்டிய கவனம் செலுத்தும் என்று குறிப்பிட்டேன். இந்த அரசாங்கம் இது சம்பந்தமான பிரச்னையில் எப்போதும் தொடர்ந்து கவனம் செலுத்தும். இது அரசாங்கத்தின் கவனத்தில் தொடர்ந்து இருந்து வருகின்ற பிரச்னை. நிர்வாகப் பிரச்னையும் கூட. ஆகவே இது அவசரப் பிரேரணைக்குரியது அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER : I withold my consent to the hon. Member to raise this subject as an adjournment motion.

(3) FINANCIAL ASSISTANCE TO REPATRIATES FROM BURMA.

MR. SPEAKER : The hon. Member Sri Rama. Arangannal has also given notice of an adjournment motion. He may now briebly explain how the matter can be considered as an adjournment motion.

திரு. இராம. அரங்கண்ணல் : ஸார், என்னுடைய ஒத்திவைப்புப் பிரேரணை அவசரமான காரணத்தைக் கொண்டதாக இருக்கிறது. பர்மாவிலிருந்து வெளியேற்றப்பட்ட தமிழர்கள், தமிழ் நாட்டிலுள்ள பல மாவட்டங்களிலும், சென்னை மாநகரத்திலும் இருந்து கொண்டிருக்கிறார்கள். சுமார் இவ்வாறு 2 லட்சம் பேர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு வேண்டிய உதவியைச் செய்வதற்கு மாவட்ட கலெக்டர்களுக்கு அரசாங்கம் சில உத்தரவுகளை அனுப்பியிருக்கிறது. அவர்களுக்கு நிலம் தரப்படவேண்டும் என்றும், தரப்படுகின்ற நிலம் சம்பந்தப்பட்ட விவரங்கள் மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை கலெக்டரால் அரசாங்கத்திற்கு அனுப்பப் படவேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் திருச்சியில் அண்மையில் இவ்வாறு வெளியேற்றப்பட்ட தமிழர்கள், ஆர்ப்பாட்டம் செய்திருக்கிறார்கள். என்னசெய்வது என்று தெரியாமல் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். அதோடு மட்டுமல்ல. சென்னை மாநகரத்தில், குறிப்பாக என்னுடைய தொகுதியில், இவ்வாறு பர்மாவிலிருந்து வெளியேற்றப்பட்ட தமிழர்கள் படுகின்ற பாட்டைச் சொல்வதற்குக்கூட மிகச் சங்கடமாக இருக்கிறது. சென்னையிலிருக்கின்றவர்களுக்கு 2,000 ரூபாய் கொடுக்கவேண்டும் என்று அரசாங்கம் முடிவு எடுத்திருப்பதாகத்தெரிகிறது. ஆனால் ஒரு பகுதியாக 200 ரூபாயும், இன்னொரு பகுதியாக 500 ரூபாயும் கொடுக்கப்படுகிறது என்று தெரிகிறது. கடந்த ஓராண்டு காலமாக காலணா கூட கிடைக்காமல் அவர்கள் குழந்தை குட்டிகளோடு கஷ்டப்படுகிறார்கள். ராஜாமணி என்கிற பெண் தன் நான்கு குழந்தைகளையும் வைத்துக் கொண்டு வயிற்றுப்பிழைப்புக்கு வழியில்லாமல் வீதியில் திண்டாடிக் கொண்டு இருக்கிறாள்......

MR. SPEAKER : The hon. Member is going into details.

திரு. இராம. அரங்கண்ணல்: இம்மாதிரியான பரிதாபகரமான நிகழ்ச்சிகளைப் பார்க்கிற நேரத்தில், சர்க்காருடைய கவனம் உடனடியாக ஈர்க்கப்பட்டால்தான் ஏதாவது நடவடிக்கை எடுக்க முடியுமே தவிர அவர்களுடைய பசியை உடனே போக்குவதற்கு வேறு வழி தேட முடியாது என்று எண்ணுகிறேன்.

28th February 1966] [திரு. இராம. அரங்கண்ணல்]

இந்தப் பிரச்னையைப் பொது விவாதத்திலே எழுப்பி, அதற்கான பதிலைப் பெறுகிற அளவுக்கு நாங்கள் காத்து இருக்கக் கூடும். இது மிக மிக முக்கியமான பிரச்னையாக இருப்பதாலும், அன்றாடம் வாழ்க்கை நடத்துவதற்குச் சங்கடப்பட்டுக்கொண்டு இருப்பதாலும், அரசாங்கம் இதிலே உடனடியாக கவனம் செலுத்தவேண்டுமென்ற ஆசையினாலும், சபையின் அலுவல்களை ஒத்திவைத்து இதைப்பற்றி விவாதிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

***கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் சபாநாயகர் அவர்களே, அவசரப் பிரேரணைக்கு உரியதாக இருப்பதற்கு, சம்பவம் சமீபத்தில் நடைபெற்ற சம்பவமாக இருக்கவேண்டும்; இரண்டாவது, ஸ்பெஸிஃபிக் மேட்டராக இருக்கவேண்டும்—அதாவது ரீஸெண்டாக இருக்கவேண்டும்; ஸ்பெஸிஃபிக்காக இருக்கவேண்டும். இரண்டும் இதிலே இல்லை. அரசாங்கம் சமீபத்திலே ஒன்றும் உத்தரவு போடவில்லை. ஏற்கனவே இருக்கிற முறைப்படி தான் அமல் நடத்தப்பட்டு வருகிறது. இதிலே சில மாவட்டங்களில் நல்ல முறையில் கவனிக்கப்பட்டு வருகின்றது என்று கூடக் கூறுவேன். திருச்சி மாவட்டத்தில் நன்றாக கவனிக்கப்பட்டு வருகின்றது. மற்ற மாவட்டங்களிலும் கவனிக்கப்பட்டு வருகின்றது. அகதிகள் விஷயத்தில் பெரிதும் கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது. இருந்தாலும் குறைகள் இருக்கலாம். அவைகள் மீதும் அப்போதைக்கப்போது கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது. இதைப் பற்றி மேலும் கருத்துகள் தெரிவிக்கவேண்டுமென்றால், பட்ஜெட்மீதான பொது விவாதத்தில் தெரிவிக்கலாம். அவற்றையும் அரசாங்கம் கவனிக்க சந்தர்ப்பம் இருக்கும் என்று கூறிக்கொண்டு, இது அவசரப் பிரேரணைக்கு உரியது அல்ல என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER : This is not a matter for an adjournment motion. Hence, I withhold my consent to it.

IV.—ANNOUNCEMENT.

BUSINESS OF THE HOUSE.

MR. SPEAKER : I wish to inform the House the following decisions of the Business Advisory Committee which met on the 26th February 1966.

28th February 1966 to 5th March 1966.	General Discussion on the Budget for the year 1966–67.
7th March to 26th March 1966 except holidays on 13th, 20th and 23rd March 1966.	Voting on Demands for Grants for 1966–67.
26th March 1966	Introduction of Appropriation Bill.
28th March 1966	(i) General Discussion on the Final Supplementary Statement of Expenditure for 1965–66 and Voting on Demands for Further Grants for 1965–66. (ii) Introduction of Appropriation Bill.
29th March 1966	Consideration of Appropriation Bills.
30th March 1966 and 31st March 1966.	Official business.

The House will sit as usual daily from 8–30 a.m. to 1–30 p.m.